# ரஜீஹர் மனோகரனுக்காக குரல்கொடுத்து நடவடிக்கையில் இறங்குங்கள்



ரஜீஹர் மனோகரனும் உடன் படிக்கும் வேறு நான்கு மாணவர்களும் இலங்கை பாதுகாப்பு படையினரால் 2 ஜனவரி 2006 அன்று சுட்டுக் கொல்லப்பட்டிருந்தனர். துப்பாக்கி சூட்டு சத்தம் ரஜீஹரின் தந்தைக்கு காதில் விழுந்திருந்தது. தனது மகனின் மரணம் தொடர்பான விசாரணையில் சாட்சியம் அளித்தமைக்காக தந்தைக்கு கொலை மிரட்டல்களும் வந்திருந்தன.

ஜனவரி 2ஆம் தேதியன்று திருகோணமலை கடற்கரையில் கூடி பேசிக்கொண்டிருந்த மாணவர்களில் ரஜீஹர் மனோகரனும் ஒருவர். அப்போது அவ்வழியாக சென்ற ஒரு ஆட்டோ ரிக்ஷாவில் இருந்து அந்த மாணவர்கள் மீது ஓர் கையெறிகுண்டு வீசப்பட்டிருந்தது. அதனால் அந்த மாணவர்கள் சிதறி ஓடியிருந்தனர். சிறிது நேரத்தில் விசேட அதிரடிப் படையைச் சேர்ந்தவர்கள் என்று நம்பப்படும் சீருடை அணிந்த சிப்பாய்கள் 10, 15 பேர் அங்கு வந்திருந்தனர். காயமடைந்து கிடந்த மாணவர்களை ஜீப்புக்குள் ஏற்றிப் போட்டு, துப்பாக்கியின் பின்பக்கத்தால் அவர்களைத் தாக்கியும், பின்னர் தெருவிலே தள்ளிவிட்டும் இருந்தனர். அந்த ஐந்து மாணவர்களையும் அவர்கள் சுட்டுக் கொன்றதாக சாட்சிகள் சொல்கின்றனர். அதில் ஒருவர் தான் ரஜீஹர் மனோகரன்.

தான் இறப்பதற்கு சற்று நேரம் முன்பாக, ரஜீஹர் மனோகரன் தனது தந்தையின் தொலைபேசியில் அவசர அவசரமாகப் பேசி செய்தி ஒன்றைப் பதிய விட்டிருந்தார். தன்னை பாதுகாப்புப் படையினர் சூழ்ந்துள்ளனர் என அதில் அவர் தெரிவித்திருந்தார். தந்தையான மருத்துவர் காசிப்பிள்ளை மனோகரன் அந்த இடத்துக்குச் சென்றபோது, மாணவர்கள் தங்கள் உயிருக்காக மன்றாடியதும் அத்தருணத்தில் துப்பாக்கி வேட்டுகள் தீர்ந்ததும் அவர் காதில் விழுந்திருந்தன. இந்த ஐந்து மாணவர்களும் துப்பாக்கி குண்டு பாய்ந்து இறந்துள்ளனர் என ஒரு பிரேதப் பரிசோதனை அறிக்கை சுட்டிக்காட்டியது என்றாலும், இவர்கள் கையெறி குண்டுத் தாக்குதலில் இறந்ததாக பாதுகாப்புப் படையினர் தெரிவித்திருந்தனர்.

10 ஜனவரி 2006 அன்று மரண விசாரணையில் சாட்சியம் அளித்த பின்னர், மருத்துவர் மனோகரனுக்கும் அவருடைய குடும்பத்துக்கும் அச்சுறுத்தல்களும், தொல்லைகளும் தரப்பட்டிருந்தன, கொலை மிரட்டல்களும் விடுக்கப்பட்டிருந்தன. கடைசியில் அவர்கள் நாட்டை விட்டே வெளியேறி வெளிநாடொன்றில் தஞ்சம் கோர நேர்ந்தது. இந்த கொலைகள் தொடர்பில் பாதுகாப்புப் படையினர் 13 பேர் கைதுசெய்யப்பட்டார்கள் என்றாலும், பின்னர் இவர்கள் விடுவிக்கப்பட்டிருந்தனர். இந்த சம்பவத்தையும் வேறு 11 சம்பவங்களையும் விசாரிப்பதற்காக விசாரணை ஆணையம் ஒன்று நியமிக்கப்பட்டிருந்தது. ஆனால் அந்த ஆணையத்தின் அறிக்கை ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்கப்பட்டிருந்தும் அது பிரசுரிக்கப்படவே இல்லை. இச்சம்பவம் பற்றி முறையான புலனாய்வு எதுவுமே நடத்தப்படவும் இல்லை, ரஜீஹரின் கொலை தொடர்பில் எவரும் சட்டத்தின் முன்பு நிறுத்தப்படவும் இல்லை.

தனது மகனின் கொலைக்குப் பின்னர், அதற்காக நீதி கேட்டுப் பகிரங்கமாகவே போராடும் ஒரு உரிமை ஆர்வலராக மருத்துவர் மனோகரன் ஆகிவிட்டார்.

3-17 டிசம்பர் 2011

**உரிமைகளுக்காக எழுதுங்கள்**

**மாற்றத்தைக் கொண்டுவாருங்கள்**




# இப்போதே செயலில் இறங்குங்கள்

**பின்வருவனவற்றைக் குறிப்பிட்டு இலங்கை ஜனாதிபதிக்கு எழுதுங்கள்:**

- ரஜீஹர் மனோகரனது குடும்பத்துக்கு நீதி கிடைக்க வேண்டும் என்பதையும், அவர்களது மகனுக்கு என்னானது என்பது பற்றிய உண்மை வெளிக்கொண்டுவரப்பட வேண்டும் என்பதையும் வலியுறுத்துங்கள்.
- ரஜீஹர் மனோகரன் கொலை தொடர்பில் 2006 நவம்பரில் நியமிக்கப்பட்ட விசாரணை ஆணையம் சமர்ப்பித்த அறிக்கையை பிரசுரிக்க வேண்டும் எனக் கோருங்கள்.
- இந்த சம்பவம் தொடர்பிலும், இலங்கையில் நடந்துள்ள பிற மனித உரிமை மீறல்கள் தொடர்பிலும் நிஜமான விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று குரல்கொடுங்கள்.

**உங்களது மனுக்களை அனுப்பவேண்டிய முகவரி:**

President Mahinda Rajapaksa
Presidential Secretariat
Colombo 1
Sri Lanka

தொலைநகல்: 00-94 11 244 6657
மின்னஞ்சல்: prsec@presidentsoffice.lk / lalith@icta.lk
விளிக்கும் முறை: மேதகு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்கள் / His Excellency the President, Mahinda Rajapaksa

**ஆதரவுக் கடிதம் ஒன்றை அனுப்புங்கள்:**

ரஜீஹர் மனோகரனின் குடும்பத்துக்கு ஆதரவுக் கடிதம் ஒன்றை அனுப்புங்கள். தயவுசெய்து மத அடையாளம் கொண்ட அட்டைகளை அனுப்ப வேண்டாம்.

Dr K. Manoharan and his family
c/o Sri Lanka Team,
Amnesty International
1 Easton Street
London
WC1X ODW
United Kingdom

AMNESTY INTERNATIONAL
செப்டம்பர் 2011
ஆவணத் தொகுதி குறியீட்டு எண்: ASA 37/011/2011
Tamil

Amnesty International
International Secretariat
Peter Benenson House
1 Easton Street
London WC1X ODW
United Kingdom

www.amnesty.org /individuals-at-risk